## பத்திரிக்கைச் செய்தி

மதுரை மாவட்டக் கருவூல ஓரலகில் காலியாக உள்ள ஆறு அலுவலக உதவியாளர் பணியிடங்கள் (ஊதிய விகிதம் ரூ. 15,700 - 50,000) நிரப்பப்பட உள்ளன. மேற்கண்ட அலுவலக உதவியாளர் பணிக்கு குறைந்த பட்சம் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இனசுழற்சி வரிசை அடிப்படையில் பொதுப் பிரிவினர் -1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாத இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) -2, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) -1, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் -1, ஆதி திராவிடர் (ஆதரவற்ற விதவை) - 1. அனைத்து பிரிவினரும் 01.01.2020 அன்று குறைந்தபட்சம் 18 வயது பூர்த்தியடைந்தும், அதிக பட்சமாக ஆதிதிராவிடர், அருந்ததியினர் மற்றும் பழங்குடியினருக்கு அனைத்து வகுப்பு ஆதரவற்ற விதவைக்கு 35 வயதும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 32 வயதும் இதர பிரிவினருக்கு 30 வயதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்புக்கு மேல் படித்த பி.சி, எம்.பி.சி, எஸ்.சி, எஸ்.டி பிரிவினருக்கு உச்ச வயது வரம்பு ஏதுமில்லை.

மேற்காணும் பதவிகளுக்கு தகுதிபெற்ற நபர்கள் புகைப்படத்துடன், பூர்த்தி செய்த விண்ணப்பத்தை "சம்பளக் கணக்கு அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலகம், 224, தெற்கு வெளி வீதி, மதுரை - 625 001" என்ற முகவரியில் 2020 மார்ச் 9 மாலை 5.45 மணிக்குள் சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

இதற்கான அறிவிப்பு https://madurai.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இப்பதவிக்கான விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

14.2.2020

சம்பளக் கணக்கு அலுவலர்,
மதுரை.

14.2.2020

2650016